இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,343, DECEMBER 3, 1909.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

### காணி விற்பனைவுகள்.

No. 579, N. P.

கொலோனியல் சக்கிறித்தார் ஆபிசில்,
கொழும்பில், 1909 ம

1910 ம் ஆண்டு தைமாதம் 25 ந் தேதி, இயாட்பாணத்தில் தன் ஆபிசில் வட மாகா
றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசா
பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது உரித்து முடிவுப

11 காணித்துண்டுகள், வட மாகாணத்து இயாட்பாண டிஸ்திறிக்கின் பச்சிலைப்பள்
பகுதியிலிருக்கின்றது.

பிளான் இல. 3,432. குறிச்சி—பெரிய பச்சிலைப்பளி.

| காணித்துண்டின் இல. | கேள்விக்காரனின் பெயர். | உரித்தாளியின் பெயர். | விவரம். |
|---|---|---|---|
| 12593 | — | அரசாட்சி | அந்தத் துண்டில் அ… ளுண்டு |
| 12594 | கடற்கரை நீளம் விடப்பட்ட நிலம் | டிை | — |
| 12595 | ஒழுங்கைக்காக விடப்பட்ட நிலம் | டிை | — |
| 12596 | டிை | டிை | — |
| 12597 | டிை | டிை | — |
| 12598 | — | எஸ். மரியான் | தென்னையும் பனையுப |
| 12593½ | எம். அந்தோனி | அரசாட்சி | மணல் தரவை |
| 12593¼ | — | மிக்கேல் பேதுருவும் ஞானப்பிரகாசம் மிக்கேலும் | அந்தத் துண்டில் ப |
| | | பிளான் இல. 3,586. குறிச்சி—கவுதாரிமுனை. | |
| 13352 | என். அந்தோனிப்பிள்ளை | அரசாட்சி | தென்னைக்குத்தக்க |
| 13353 | றேட்டுக்காக விடப்பட்ட நிலம் | டிை | — |
| | | பிளான் இல. 3,050. குறிச்சி—கோப்பாய். | |
| 11344 | — | சாலஞ்சென்றபோன ஏ. மயில்வாகனம் | தென்னந்தோட்டப்பூமி (உரித்து முடிவாக) |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து
அளவுகந்தோரில் பெரியதுரை அவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர

---

No. 581, N. P.

கொலோனியல்
கொழும்பில், 1909 ம் ௵ நவ

1910 ம் ஆண்டு தைமாதம் 20 ந் தேதி, வவுனியாவில் தன் ஆபிசில், வட மாகாண
உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்…
ரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது குட்டியில் விடப்படும்.

33 காணித்துண்டுகள், வட மாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் வவுனியா தெற்குத் தமிழ் பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 2,829. பரசங்குளம். உரித்தாளி—முடி.

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரன் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. பெ. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 10106 | குத்தியடிக்கமம் | கணபதிகாளி | நெல்லுக்குதவியவெளி நிலம் | 2 2 38 | 20 0 |

| காணித்துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விகாரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. பெ. | தீர்ப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 3,479. கலநாட்டினகுளம். | | | |
| 12959 | கல்லடிக்காடு | மனுவல்தம்பு | நெல்லுக்குதவிய காடு | 2 0 15 | 15 0 |
| 12960 | ஷை | சின்னத்தம்பிமயிலு | ஷை | 1 3 6 | 15 0 |
| 12961 | ஷை | எஸ். தாசிஇராயப்பன் | ஷை | 0 3 34 | 15 0 |
| 12962 | ஷை | சின்னத்தம்பி கதிராமு | ஷை | 2 0 10 | 15 0 |
| 12963 | ஷை | முருகர் கதிராமு | ஷை | 5 2 24 | 15 0 |
| 12964 | ஷை | மனுவல் சந்தியாகு | ஷை | 1 0 27 | 15 0 |
| | | பிளான் இல. 3,528. செக்கடிபிலவு. | உரித்தாளி—முடி. | | |
| 13189 | தரம்பைக்காட்டுநிலம் | சின்னையா கணபதிப்பிள்ளை | நெல்லுக்கேற்றகாடு | 6 1 30 | 16 0* |
| 13190 | ஷை | கார்த்திகேசு செல்லத்தம்பி | ஷை | 4 2 0 | 18 50* |
| 13191 | பாலையடிபிக்காணி | கந்தவனம் வயிரமுத்து | ஷை | 3 0 2 | 17 0* |
| 13192 | நாவலடிபிக்கரம்பைக் காடு | விநாசித்தம்பி நல்லதம்பி | ஷை | 3 0 8 | 16 50* |
| 13193 | நாவலடிபிக்காடு | ஷை | ஷை | 7 2 10 | 19 0* |
| 13194 | பாலையடிக்காடு | தம்பையாசிவகுருநாதபிள்ளை | ஷை | 8 0 28 | 17 0* |
| 13195 | மருதடிக்காடு | முருகர்சண்முகம் | ஷை | 4 0 18 | 18 50* |
| | | பிளான் இல. 3,546. இறம்பைக்குளம். | உரித்தாளி—முடி. | | |
| 13242 | குருமன்காட்டுநிலம் | தி. வஸ்தியாம்பிள்ளையும் மறவும். | தோட்டத்திற்கேற்ற காடு | 5 3 28 | 23 50* |
| 13243 | ஷை | — | றோட்டுக்குவிடப்பட்டது | 0 1 1 | — |
| 13244 | பாலையடித்துண்டு | — | ஷை | 0 θ 26 | — |
| 13245 | பாலையடித்துண்டு | ச. இராமுப்பிள்ளை | தோட்டத்திற்கேற்ற காடு | 3 3 12 | 21 0* |
| 13246 | ஷை | — | வாய்க்காலுக்கு விடப்பட்டது | 0 1 6 | — |
| | | பிளான் இல. 3,554. புதூர். | உரித்தாளி—முடி. | | |
| 13269 | பாலையடிக்காணி | உ. பி. அசனுலெவ்வை | நெல்லுக்கேற்ற காடு | 5 2 17 | 16 50* |
| 13270 | ஷை | அ. சேகுமுகம்மது | ஷை | 4 0 9 | 16 50* |
| | | பிளான் இல. 3,559. பம்பைமடு. | உரித்தாளி—முடி. | | |
| 13283 | மருதடிக்காடு | ஆசியர் வைகாளிப்பிள்ளை | நெல்லுக்கேற்ற காடு | 5 2 15 | 16 50* |
| 13284 | கட்டைக்காட்டு நிலம் | அனந்தர் கனகரத்தினம் | ஷை | 10 3 25 | 15 50* |
| | | பிளான் இல. 3,561. பத்திரகாளிக்குளம். | உரித்தாளி—விநாசித்தம்பி செல்லன். | | |
| 13288 | பத்திரகாளிக்குளத்து வயல் | — | வயல் | 0 3 34 | 30 0† |
| | | பிளான் இல. 3,561. இலுப்பைக்குளம். | உரித்தாளி—முடி. | | |
| 13289 | நாவலடிக்காடு | ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை | நெல்லுக்கேற்ற காடு | 5 3 18 | 16 50* |
| | | பிளான் இல. 3,562. தெற்கிலுப்பைக்குளம். | உரித்தாளி—முடி. | | |
| 13290 | நாவலடித்தறை | க. மரியாம்பிள்ளை | நெல்லுக்கேற்ற காடு | 2 0 31 | 20 0* |
| | | பிளான் இல. 3,565. நாவற்குளம் | உரித்தாளி—முடி. | | |
| 13298 | நாவலடிக்காணி | அ. விநாசித்தம்பி | தோட்டத்திற்கேற்ற நிலம் | 1 1 6 | 20 0 |
| 13299 | ஷை | — | பாதைக்காக விடப்பட்டது | 0 0 20 | — |
| | | பிளான் இல. 3,569. தவசியாகுளம். | உரித்தாளி—முடி. | | |
| 13307 | யார்க்காடு | ச. ஆறுமுகம் | குடியிருக்கவேற்ற வெளிநிலம் | 1 1 17 | 20 0 |
| 13308 | ஷை | — | பாதைக்காக விடப்பட்டது | 0 0 12 | — |
| | | பிளான் இல. 3,571. அலைகல்லுப்போட்டகுளம். | உரித்தாளி—முடி. | | |
| 13311 | யார்காட்டுநிலம் | அ. விநாசித்தம்பி | குடியிருக்க ஏற்ற வெளிநிலம் | 1 0 36 | 25 |
| | | பிளான் இல. 3,574. பட்டாணிச்சி புளியங்குளம். | உரித்தாளி—முடி. | | |
| 13324 | விளாத்தியடிக்காடு | கப்புடையார் முகைதீன் | நெல்லுக்கேற்றகாடு | 2 1 3 | 20 |
| | | பிளான் இல. 3,576. வயிரவர் புளியங்குளம். | உரித்தாளி—முடி. | | |
| 13328 | புளியடிக்காடு | கந்தர் சுப்பிரமணியம் | நெல்லுக்கேற்றகாடு | 3 1 30 | 25 0 |

*இக்காணித்துண்டுகளில் விலைபெற்ற மரங்களிருக்கின்றன.

†இது அருகதனம்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விவரங்கள் முல்லைத்தீவு அரசாட்சி உதவி ஏசென்றத்துரையவர்களிடத்திலும் பிளான்களைப்பற்றி சர்வேயர் ஜெனறல்துரையவர்களிடத்திலும் கேட்டறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,

ஹியூ கிளிவோட்,
இராசாங்க லிகிதர்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

### [Udapota, Kegalle District.]

1876 ம் ஆ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடபொதா என்னுமிடத்தில் கூவிலின் கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அத்தாவது:—

பிரதமபடத்து இலக்கம் 1,847. குறிச்சி—உடப்பொதா.

| துண்டு. | காணியின பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| C 208 | கஜுகலயேன | சேனை | 1 உடபொட்டகந்தவத்தை கிரிமெனிக்கா, 2 ஐயவர்தனகே கேத்துவா, 3 யோதகே மொகொத்தா, 4 மொகதுரைகே சமறு, 5 இம்புள்பீராவத்தை சமரு, 6 றன்கொத்தகே மொகொத்தா, 7 மகாலத்த டிங்கிறி, இவர்கள் எல்லோரு மிருப்பது உடபொத்த | 0 2 10·50 |
| C 208½ | ஷை. | சேனை | ஷை. | 0 0 7·16 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல், அக்காணிகளை ஆட்கொப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஆ மார்கழிமாசம் 29 ந் தேதியிலன்று 1 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1909 ம் ஆ கார்த்திகைமீ 25 ந் உ.

எச். ஆர். பரவ்னிங்,
உதவி அரசாட்சி ஏசன்டு.

---

### [Henemulla, Kurunegala District.]

1876 ம் ஆ த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் குருநாக்கல் நில அளவைத் தலைவரது இருப்பிடத்திற்கும் வேலைத்தலத்திற்குமாக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அத்தாவது:—

பிரதம படத்து இலக்கம் 3,786. குறிச்சி—ஹெனெமுல்லை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|
| R 1300 | கெதவளகாவயேன | வெளியாக்கப்பட்ட சேன | எம். ஏ. மூனமலை பெண் | 0 3 36·50 |
| S 1300 | ஹுரிசஹமுலயேனவத்தை | தென்னந்தோட்டம் | ஜி. இ. மடவெலவும், ஸி. இ. தென்னகூன் | 3 0 15·50 |
| T 1300 | ஷை. | ஷை. | ஷை. | 0 3 14 |
| U 1300 | கெதவளகவாயேனவத்தை | ஷை. | எம். ஏ. மூனமலை பெண் | 0 0 16·87 |
| V 1300 | ஹுரிசஹமுலயேனவத்தை | ஷை. | ஜி. இ. மடவெலவும், ஸி. இ. தென்னக்கூனும் | 0 1 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினல், அக்காணிகளை ஆட்கொப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஆ தைமாசம் 18 ந் தேதியிலன்று ஒரு மணிக்கு குருநக்கலில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1909 ம் ஆ நொவம்பர்மீ 29 ந் உ.

ஜீ. எஸ். சக்ஸ்றன்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசன்று.

---

### [Hunupola, Kurunegala District.]

1876 ம் ஆ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹுனுப்பொலையிலுள்ள பள்ளிக்கூடத்தின் உபயோகத்திற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அத்தாவது:—

பிரதம படத்து இல. 3,734. குறிச்சி—ஹுனுப்பொலை.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|
| J 1299 | தெல்விகஹவத்தஹேன | பள்ளிக்கூடத்தோட்டம் | (1) ஹெறத்முதியான்ஸிலாகே அப்புகாமி, (2) ஹெறத்முதியான்ஸிலாகே புஞ்சிறல, (3) ஹெறத்முதியான்ஸிலாகே முதியான்ஸி, (4) ஹெறத்முதியான்ஸிலாகே டிங்கிரிபண்டா, (5) ஹெறத்முதியான்ஸிலாகே கிரிபண்டா, யாவரும் ஹுனுப்பொலையிலுள்ளவர்கள் | 0 0 26 |
| K 1299 | ஷை. | பள்ளிக்கூடத்தோட்டமும் பள்ளிக்கூடமும் | ஷை. | 1 0 27 50 |
| L 1299 | ஷை. | பள்ளிகூட தோட்டம் | ஷை. | 1 2 22 |
| M 1299 | ஷை. | ஷை. | ஷை. | 0 1 9·50 |

எடுத்துக்கொள்வதற்கான ஏற்பாடுசெய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1910 ம் ஹூ தைமாதம் 18 ந் திகதியன்று 1 மணிக்கு குருநாகலில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்கப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1909 ம் ஹூ கார்த்திகை மீ 29 ந் உ.

ஜே எஸ். செக்ஸ்றன்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏஜன்று.

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Anuradhapura S. O. 3—1908.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஹூ டிசம்பர் (மார்கழி) மீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கட்டிய காணிகளின் விவரம்.

வடமத்திய மாகாணம் காலகம்பலாத்தை வடகெலேகம் கோறளை இகலகெலேகம்துளானையைச்சேர்ந்த பகலவெம்புவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *உறுதிப்படுத்திய படப்பிரதியில் விவரித்தபடியே, இங்குறிக்கும் காணித்துண்டுகள் :—

| காணித்துண்டு. | காணியின் பெயர். | பிரதம படம் 5. | | | | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|---|---|
| 1 ... | பகலவெம்புவஹக்கஸனை | ... | ... | ... | ... | 51 2 25 |
| 2 ... | பகலவெம்புலகெலே | ... | ... | ... | ... | 68 0 22 |
| | | | | | | 119 3 7 |

எல்லைகளாவன : வடக்கு-இகலவெம்புவக் கிராம எல்லை ; கிழக்கு-யோதஎல என்னும் நீரோடை ; தெற்கு-அன்வெத்துமக் கிராம எல்லை ; மேற்கு-இகலவெம்புவக் கிராம எல்லை.

2,928 * இங்கிலீசின் IV. ம் பாகம் 1720 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

---

[Hambantota S. O. 95—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி) மீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையிலுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாதாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கட்டிய காணியின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்குக் கிறுவாப்பத்து கிழக்கைச்சேர்ந்த ஹுனம என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விவரித்தபடியே 2 றூட்டு விசாலமுடையதும் சாமானியமாய் மவித்தங்காவத்தை என்னும் பெயரினால் அழைக்கப்பட்டு அல்லது அறியப்பட்டுவருவதும் 467 ம் பிரதமபடத்தில் 6a ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி ; இதற்கெல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-அப்பவிக்கிறம விஜேசுந்தேற மொகொத்தி அப்புகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மவித்தங்காவத்தை (241,212 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி) ; தெற்கு-222,067 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, அப்பவிக்கிறம மொகொத்தி அப்புகாமி உரித்துப்பேசும் கியம்பலகாக்கொறட்டுவ ; மேற்கு-ஊர் குளக்கட்டு, ஹுனமவெவக்குளம்.

3,637 * இங்கிலீசின் IV. ம் பாகம் 1721 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

---

[Kurunegala S. O. 86—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஹூ டிசம்பர் (மார்கழி) மீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்குத் தம்பதெனிகாத்பத்தில் உடுகொக்கோறளே மேற்கில் வெறகல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 244.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 10b ... | கியுவியத்தேகென (கற்பாறை) ... ... ... ... | 0 1 30 |
| 10c ... | கபாகேவத்தேகென ( டிை ) ... ... ... ... | 1 1 10 |
| | | 1 3 0 |

எல்லைகளாவன : வடக்கு-குறகல்பேதிறுறயலாகே பண்டியாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கெவுல்வியத்த ; கிழக்கு-றங்கொத்பேதிறுறயலாகே கபுவவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கல்காமுலக்கும்புற, முத்துகல்பேதிறுறயலாகே குறத்தவிக்கும் இன்னும் மூன்று பெயருக்கும் முடியால் விற்கப்பட்ட கல்காகேனை ; தெற்கு-குறத்தல்பேதிறுறயலாகே பபியவுக்கு முடியால் விற்கப்பட்ட கறுவலகஸ்கனத்த ; மேற்கு-எச். மெனிக்காவுக்கு முடியால் விற்கப்பட்ட கறுவலகஸ்வத்தை (265,096 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி), எச். கப்புவவுக்கு முடியால் விற்கப்பட்ட கொனகும்புறேகென.

II.

பிரதம படம் 244.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 10 ... | கொட்டகல்லேகென (கற்பாறை) ... ... ... ... | 1 1 30 |

எல்லைகளாவன : வடக்கு-குறத்தல் பேதிறுறயலாகே மெனிக்கியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கந்தறக்கும்புற ; கிழக்கு-குறத்தல்பேதிறுறயலாகே கிறிய உரித்துப்பேசும் கொனவரும்புற, குறத்தல்பேதிறுறயலாகே எல்வி உரித்துப்பேசும் கொட்டகலவத்தை ; தெற்கு-முடி உரித்துப்பேசும் இகலவத்தேகென ; மேற்கு-குறத்தல்பேதிறுறயலாகே டிங்கியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கொபெருக்காவத்தை, குறத்தல்பேதிறுறயலாகே நில்வி உரித்துப்பேசும் கந்தறவத்தை.

III.

பிரதம படம் 244.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 10l ... | கல்கொடேகென ... ... ... ... | 2 3 0 |
| 10n ... | டிை ... ... ... ... | 2 1 0 |
| | | 5 0 0 |

எல்லைகளாவன : வடக்கு-எச். பபியாவுக்கு முடியால் விற்கப்பட்ட கறுவலகஸ்கனத்த, முத்துகல்பேதிறுறயலாகே குறத்தவிக்கும் இன்னும் மூன்று பெயருக்கும் முடியால் விற்கப்பட்ட கல்காகேனை ; கிழக்கு-குறத்தல்பேதிறுறயலாகே பண்டியாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் தெகந்துவேவத்தை 265,083 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, எச். கப்புவவுக்கும் இன்னும் மூன்று பெயருக்கும் முடியால் விற்கப்பட்ட தெகந்துவேவத்தை (265,194 ம் உரிமைப் படத்திற் கண்டிருக்கும் காணி) ; தெற்கு-எச். கப்புவவுக்கு முடியால் விற்கப்பட்ட ரிபொற்றுவந்த ; மேற்கு-எச். கேற்றுவவுக்கும் இன்னொருவருக்கும் முடியால் விற்கப்பட்ட ரிபொற்றுவந்தேகென, எச். கிறியாவுக்கு முடியால் விற்கப்பட்ட ரிபொற்றுவந்தேகென, றங்கொத்பேதிறுறயலாகே கிறியவுக்கு முடியால் விற்கப்பட்ட கறுவலகஸகனத்த.

IV.

பிரதம படம் 244.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 13d ... | அஸ்வெத்துமேகென ... ... ... ... | 0 3 23 |

எல்லைகளாவன : வடக்கு-முடி உரித்துப்பேசும் புளுகாமுலகென ; கிழக்கு-முத்துகல்பேதிறுறயலாகே குறத்தவிக்கும் இன்னும் மூன்று பெயருக்கும் முடியால் விற்கப்பட்ட எகொடகேன ; தெற்கு-றங்கல்லேபொலக் கிராம எல்லை ; மேற்கு-கொறம்பபேதிறுறயலாகே சேதுவா உரித்துப்பேசும் தளுப்பொத்த.

3,638 * இங்கிலீஷின் IV. ம் பாகம் 1722—1724 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

---

[Kurunegala S. O. 87—1903.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஞு டிசம்பர் (மார்கழி)மீ 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக்குக் தேவமெதிகாத்பத்தில் உடுகாகோறளையைச்சேர்ந்த கலுகமுவ என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 405.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 14p ... | கபுவத்தேவென ... ... ... ... | 1 1 3 |

*இங்கிலீஷின் IV. ம் பாகம் 1725—1727 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

எல்லைகளாவன: வடக்கு-பன்னெகேகமுதியான்செலாகே றன்காமி உரித்துப்பேசும் நாகாபிற்றியேயன; கிழக்கு-பன்னெகேகமுதியான்செலாகே கிறிபண்டா உரித்துப்பேசும் நாகாபிற்றியேயன, பன்னெகெமுதியான்செலாகே புஞ்சிமெனிக்கா உரித்துப்பேசும் போகாமுலயேன; தெற்கு-பன்னெகெகமுதியான்செலாகே புஞ்சிமெனிக்கா உரித்துப்பேசும் போகாமுலயேன, முடி உரித்துப்பேசும் கபுவத்தெய்யன; மேற்கு-முடி உரித்துப்பேசும் கபுவத்தேயேன.

II.

பிரதம படம் 405.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 23b | ... | புஸ்வெலகலயேன | ... | ... | ... | ... | 2 0 14 |
| 23d | ... | ஷை | ... | ... | ... | ... | 1 3 7 |
| | | | | | | | 3 3 21 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட புஸ்வெலகலயேன, முடி உரித்துப்பேசும் புஸ்வெலகலயேன; கிழக்கு-முடி உரித்துப்பேசும் கெதறவலபில்லெவ, முடி உரித்துப்பேசும் வததுயாய, முடி உரித்துப்பேசும் வெறலகொல்லேய்யன; தெற்கு-முடி உரித்துப்பேசும் றத்மலேமூக்கலான; மேற்கு-முடி உரித்துப்பேசும் றத்மலேமூக்கலான, முடி உரித்துப்பேசும் றத்மலேயேன.

III.

பிரதம படம் 405.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|---|
| 27a | துங்காகொடலேயே | ... | ... | ... | ... | 0 2 25 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் துங்காகொடலே; கிழக்கு-திக்கும்புறக் கிராம எல்லை; தெற்கு-புகல்லக் கிராம எல்லை; மேற்கு-மல்கமிலகே கபுறுகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் புறனேஓவிற்ற, சபசிங்கே முதியான்செலாகே கபுறுகாமி உரித்துப்பேசும் புறனேபில்லெவ.

3,639

---

[Uva S. O. 47—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி)மீ 3 ந் தேதி துவக்கும் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிவச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம் புத்தளப்பகுதியில் புத்தலவெதிறட்டக்கோறளையைச்சேர்ந்த மூப்பனே என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 172.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | ... | புள்காவத்தை | ... | ... | ... | ... | 1 3 13 |

எல்லைகளாவன: வடக்கு-இடமெகெதெற கியத்து உரித்துப்பேசும் வெலேவத்தை; மேற்படியார் உரித்துப்பேசும் கும்புக்காஅருவ; கிழக்கும் தெற்கும்-ஓர் ரோட்டு; மேற்கு-றதமலே ஓயா ஆறு, மகந்தறச்முன்னே இடமெகெதற முதலிகாமிக்கு முடியால் விற்கப்பட்ட பசிகாவத்தே அஹத்தாலை.

II.

பிரதம படம் 172.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 25o | ... | கெலகேனெவெலயேன | ... | ... | ... | ... | 0 0 22 |
| 25p | ... | புகிறிகொல்லேயேன | ... | ... | ... | ... | 1 2 10 |
| | | | | | | | 1 2 32 |

எல்லைகளாவன: வடக்கு-173,530 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி; கிழக்கு-173,530 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி, விஜயவீரகுணரத்ன மகாவிதானே முகாந்திரமகே கென்டிறிக் அப்புவுக்கு முடியால் விற்கப்பட்ட கெலயேனெவெலயேன (263,734 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி); தெற்கு-விஜயவீரகுணரத்னமகாவிதானே முகாந்திரம்கே கென்டிறிக் அப்புவுக்கு முடியால் விற்கப்பட்ட கெலயேனெவெலயேன, (263,734 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி); மேற்கு-67,216 ம், 173,538 ம் உரிமைப்படங்களில் கண்டிருக்கும் காணிகள்.

III.

பிரதம படம் 172.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | | | | | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|---|---|---|---|---|
| 55j1 | ... | சியம்பலாவத்தை | ... | ... | ... | ... | 0 2 25 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் வெகும்புறேயேன்யாய; கிழக்கு-வெகும்புறேகன் எத்திக்கு முடியால் விற்கப்பட்ட சியம்பலகாவத்தை, (262,851 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்கும் காணி); தெற்கு-முடி உரித்துப்பேசும் ஏறமுதுகாவத்தை; மேற்கு-முடி உரித்துப்பேசும் வெகும்புறேயேன்யாய.

*இங்கிலீசின் IV. ம் பாகம் 1728—1730. ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

IV.

பிரதம படம் 172.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|
| 70o ... | இடமேகெதறகெலவத்தை ... ... ... ... | 2 0 20 |

எல்லைகளாவன: வடக்கு-விஜயவீரகுணரத்ன மகாவிதானே முகாந்திறங்கே கெண்டிறிக் அப்புவுக்கு முடியால் விற்கப்பட்ட தம்பகாரும்புறேவத்தை (262,587 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி), இல்லயானகே சின்தப்புக்கு முடியால் விற்கப்பட்ட கனிஸ்லகெலவத்தை (262,529 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி); கிழக்கு-தொன் பாறுன் அப்புகாமி உரித்துப்பேசும் இடமேகெதறவத்தை, மவிக்கார் ஆச்சிகே தொன் பாறுன் அப்புகாமிக்கு முடியால் விற்கப்பட்ட இடமேகெதறவத்தை அல்லது அருத்வத்தை, 262,471 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி); தெற்கு-பாணான ஓர் பாதை; மேற்கு-றங்கனங்கே சிங்ஞோ அப்பு உரித்துப்பேசும் வெலகலகொடயென, முடி உரித்துப்பேசும் கொலெவாக்காடத்தை.

3,640

---

[Midigama, Matara District.]

இதன்கீழ் சொல்லப்பட்டிருக்கும் காணிக்கு உரித்துடையவர் இயாருமிருக்குமாகில், அவர்கள், 1909 ம் ஆண்டு டிசம்பர் (மார்கழி)மாசம் 3 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் மாத்துறை உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்கள் முகதாவில் தெரிபட்டு தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய உதவி அரசாட்சி ஏஜன்ற் அவர்கள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையிலுள்ள வெண்ணிலச்சட்டங்களால் தமக்குண்டாகிய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணியை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதவற்றை முடிக்குரிய ஆதனமென்று தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவாரென்பதை அறிந்துகொள்க.

டப்ளியு. எல். கின்டர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏசன்று.

---

காணியின் விபரம்.

தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு வலிகம்கோறளையைச்சேர்ந்த மிதிகம யென்னும் கிராமத்திலிருக்கும் இத்துடனிணைத்திருக்கும் உறுதிப்படுத்திய *படப்பிரதியில் காணும் 8 ஏக்கர் 3 றூட் 28 பேர்சேஸ் விசாலமுள்ள சாதாரணமாய் கஹுஹலகொட யென்று சொல்லப்படும் பிரதமபடம் 8,579 ல் காணும் 25,395 ம் காணித்துண்டின் எல்லைகளாவன: வடக்கு-எம். வி. டிவேனிஸ் உரித்துப்பேசும் பிரதம படம் 8,579 ல் காணும் Z 597 ம் காணித்துண்டு, கஹுஹளகொட, வலிகாமத்து ஐசக் த ஸில்வா ஜயசுந்தர செனவிரத்ன கொதாரிஸ் உரித்துப்பேசும் பிரதம படம் 5,513 ல் காணும் J 594 ம் காணித்துண்டு கஹுஹளகொட, ஓர் அடிப்பாதை, (மெந்திஸ் த ஸில்வா ஜயவர்தனவுடைய உரித்தாளிகள் உரித்துப்பேசும் கஹுஹளதெனியகும்புர); கிழக்கு-தோட்டத்தின் பாதை, (மெந்தியஸ த ஸில்வா ஜயவர்தனவுடைய உரித்தாளிகள் உரித்துப்பேசும் கஹுஹளதெனியகும்புர); தெற்கு-விடப்பட்டிருக்கும் பகளகலகலே, பிரதம படம் 6,096 ம் காணும் 15,694½ ம் காணித்துண்டு, யாணிக்குபடதுருகே ஹர்மானிஸ் உரித்துப்பேசும் பிரதம படம் 6,096 ல் காணும் 15,694 ம் காணித்துண்டு பகளகலகலே, டி. ஏ. வியனகுணவர்தன மற்றவர் உரித்துப்பேசும் பிரதம படம் 1,657 ல் காணும் E 83 ம் காணித்துண்டு கஹுஹளகும்புர, மாத்துறை எக்தோரிஸ் த ஸில்வா பாலசூரிய உரித்துப்பேசும் பகளகலகலகும்புர; மேற்கு-ஹர்மானிஸ் உபாஸகுல உரித்துப்பேசும் பொருசெடியகும்புர, அங்கோ அப்பு வீரசேகர உரித்துப்பேசும் எத்திரகொடதெனிய.

*இங்கிலீசின் IV. ம் பாகம் 1731 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

3,641

---

# LAND RESUMPTION NOTICE.

## அரசாட்சியார் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளும் காணி விளம்பரம்.

[Medamahanuwara, Kandy District.]

இத்துடன் அணைத்திருக்கும் டாப்பில் காட்டப்படுகின்றவும் மத்திய மாகாணத்து கண்டி டிஸ்திறிக்கில் உடதும்பறை மெதசியப்பத்துவின் மெதமகாநுவரை நாட்டில் இருக்கின்றவும், அரசாட்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதுமான 151 ஏக்கர் விஸ்தாரமுள்ள துண்டுக் காணி சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாகத் தோற்றப்படுகிறபடியாலும், கவனமாகவும் நியாயமாகவும் விசாரணைசெய்தும் அச்சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கப்படாமையாலும், இதனால் சகலரும் அறியவேண்டியது யாதெனில், மத்திய மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் ஜோன் பெஞ்சி லூயிஸ் ஆகிய நான் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தின்பேரிலும், அதியுத்தம தேசாதிபதியின் ஆஞ்ஞையின்படியும், 1910 ம் ஆண்டு நவம்பர்மாதம் 30 ந் தேதியில் அல்லது அதற்கு முன்பாக அக்காணியின் சொந்தக்காரரினால் அல்லது உரித்தாளிகளினால் உரித்து ஸ்தாபிக்கப்படாவிட்டால், மேற்படி கட்டளைச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுமென்று விளம்பரப்படுத்துகிறேன்.

1909 ம் ஆண்டு நவம்பர்மீ 12 ந் உ.

ஜே. பி. லூவிஸ்,
அரசாட்சி ஏஜன்றர்.

---

குறிக்கப்பட்ட டாப்பு.

மத்தியமாகாணத்து உடதும்பறைப் பகுதியில் மெதமகாநுவரை யென்னுங் கிராமத்திலுள்ளதும் 49,538 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதும் கவிபோணியாத்தோட்டம் என்னும் பெயரையுடையதும் 151 ஏக்கர் விஸ்தாரமுள்ளதுமான ஓர் காணித்துண்டு. இதனெல்லைகளாவன: வடக்கு-பம்பறகம்யா அல்லது கொட்டாஓயாவும் ஊரவர்களின் காணியும்; கிழக்கு-49,905 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதும் காலைக்கெலைத்தோட்டம் என்னும் பெயரையுடைய முடிக்குரிய காணி; தெற்கு-முடிக்குரிய காணி; மேற்கு-49,789 ம் இலக்கப்படத்தில் விபரிக்கப்பட்டதும் பொம்புறைத்தோட்டமென்னும் பெயரையுடைய முடிக்குரிய காணி.

[Tender for License to sell Opium by Retail, Dikwella and Tangalla, Galle District.]

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில், 1899 ம் ஆண்டு துவக்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின் ஏற்பாடுகளின்படி, கீழே குறிக்கப்பட்ட பிரகாரம் திக்வல்லை தங்கல்லை குத்தகைகளுக்காகத் தனித்தனியே, காலி அரசாட்சி ஏஜென்றாதுரை அவர்கள் ஏற்றுக்கொண்ட இடங்களில, அபின் பகுந்து விற்பனத்தின் தத்துவம், 1909 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 6 ந் தேதி, திங்கட்கிழமை, பின்பகல் 1 மணி வரையில் காலி கச்சேரியில் முத்திரை வைத்த வெவ்வேறான கேள்விப் பெத்திசங்களைப் பாரமெடுக்கப்படும்.

கேள்விப் பெத்திசத்தில் கேட்கவேண்டிய பிரகாரம்:

(a) 1910 ம் ஆண்டு முதல் ஆறு மாத்தைக்கு.
(b) 1910 ம் ஆண்டு பிந்தின ஆறு மாத்தைக்கு.
(c) 1911 ம் ஆண்டு முதல் ஆறு மாத்தைக்கு.

2. குத்தகை ஆறு மாத்தைக்கு மாத்திரம் விற்கப்படும், ஆனாலும் பிரியப்படி அக்குத்தகை புதிப்பிப்புபண்ணலாம், இணைம் ஆறு அல்லது பன்னிரண்டு மாத்தைக்கு மேற்படி.

3. 1909 ம் ஆண்டு டிசம்பர்மாதம் 6 ந் தேதி பின்பகல் 1 மணி வரையில், காலி கச்சேரியில் கேள்விக்காரன தானேயாவது, முறைமையாக எழுத்தில் அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது வந்து சமுகந்தராவிட்டால் கேள்விப்பத்திரங்களைக் கவனிக்கப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் திருத்திகரமா யில்லாவிட்டால், அரசாட்சி ஏஜென்றாதுரை தன்னுடைய இஷ்டப்படி அந்தக் குத்தகைகளை வெந்திசில்போட்டு விற்பார்.

காலி கச்சேரி,
1909 ம் ஹூ நவம்பர்மீ 23 ந் உ.,

எச். ஏ. போர்டன்,
அரசாட்சி ஏசன்றுக்காக.

---

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவனென்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி 2 மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித் தொகையை ஆறு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும்வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல்வேண்டும். முதலாந் தவணைப் பணத்தை 1910 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிப்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத்தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அந்தக் காலவவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறு எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்புரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத் தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினை யெல்லாம் இன்ஸபட்டர் அல்லது பொலீஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடிய மட்டும் விளக்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா

கொடுப்பார். புதுப்புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்கஅதிகாரமுடையவரிடத்தே விலை கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பத்திக் கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும். அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பின்ன தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்க்கும் இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்தீஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைகாரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பத்திக்கலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டத் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றுத்தல், இரண்டு றுத்தல், நாலு றுத்தல், ஏழு றுத்தலாகிய அவாட்போர்ச் சாமானிய தராத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல்வேண்டும்:—

சில்லறையில் அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம்:—

| தேதி. | | ரு. அ. டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு |
|---|---|---|---|---|
| ஜூனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... இலக்கம் 1 மொத்தவிலையாளன் சுவான்பின்லே | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | |
| ஜூனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | |
| ஜூனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக [illegible] மற்றை புறத்திய அட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டியிருத்தல் வேண்டும்.

---

அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறேயின் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி; அதாவது 7 டிறும்களுக்குக்குறைய

[Tenders for provisioning the Colombo and Balangoda Hospitals.]

பின்னூற் காணப்படும் ஆசுப்பத்திரிகளுக்கு ஒன்றரை வருஷம் அதாவது 1910 ம் ஆண்டு தைமீ 1 ந் தேதி துவக்கம் 1911 ம் ஆண்டு ஆனிமீ 30 ந் தேதி வரைக்கும் தேவையான சாப்பாட்டுச்சாமான்களைக் கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுப்பத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக் கேள்விக் கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக்கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தாளுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறை வருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால் மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1909 ம் ஞூ மார்கழிமீ 14 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால், கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் முற்பணத்தை இதன்பின்னால் அட்டவணையில் சொல்லியபடி கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தந் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்து கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பணப்பிணை இதன்பின்னால் அட்டவணையில் சொல்லியபடி கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின் பேரால் முற்பணமாகக்கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்குறிப்பிட்ட பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுவதையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ண்மேந்தாருக்குண்டு.

---

அட்டவணை.

| இடம். | சமைத்த அல்லது சமையாத சாமான்கள் முதலியவை. | கேள்விப்பத்திர முற்பணத்தொகை (6 ம் பிரிவைப்பார்.) | பிணையின் முழுத்தொகைப்பணம் (8 ம் பிரிவைப்பார்.) |
|---|---|---|---|
| கொழும்பு பெரிய ஆசுப்பத்திரி (ஏழைகள் பகுதி) ... ... | பாவில்லாமல் பச்சைப்படியாய்சாப்பாட்டுச் சாமான்கள் ... | 750 ... | 1500 |
| வலாங்கொடை ஆசுப்பத்திரி ... | சமைத்த சாப்பாட்டுச் சாமான்கள் (பாலுடன்) ... ... | 375 ... | 750 |

(கையொப்பம்) அல்பெட் ஜெ. சாமெர்ஸ்,
அபிற்றிங்கு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1909 ம் ஞூ கார்த்திகைமீ 16 ந் தேதி.

---

[Tender for Lighting Street Lamps, Local Board, Anuradhapura.]

இத்தால் அறிவிப்பது "1910 ம் ஆண்டுக்கு தெருலாம்பு கொளுத்துவதற்காகக் கேள்விப்பத்திர" மென்று என்வலோப்பில் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1910 ம் ஆண்டுக்கு அநுராசபுரப் பட்டணத்திலுள்ள 30 லாம்புகளும் கொளுத்துவதற்காக 1909 ம் ஆண்டு மார்கழிமாசம் 15 ந் திகதி புதன்கிழமை மத்தியானம் பன்னிரண்டு மணிவரையிலும் லோக்கல்போட்டு அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளுவார்.

பின்னால் சொல்லப்படும் காலங்கள் தவிர, மற்றக் காலங்களில், நிலாவில்லா நேரமெல்லாம் இராப் பதினொரு மணி வரைக்கும் லாம்புகள் கொளுத்தி யிருக்க வேண்டும்.

1. எல்லா லாம்புகளும் நிலாவிருந்தாலும் இல்லாவிடினும், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாசங்களில் இரா ஆறு மணி துவக்கம் பதினொரு மணி வரைக்கும் கொளுத்தவேண்டும்.

2. ஆசுப்பத்திரிக்குக் கிட்டேயும் கோட்டல் சந்தியிலும், குருநாகல் புத்தளம் றோட்டுச் சந்தியிலுமிருக்கும் லாம்புகள் நிலாவிருந்தாலும் இல்லாவிட்டாலும் வருஷம் முழுதிலும் சாயந்தரம் ஆறு மணி துவக்கம் விடிய ஆறு மணி வரைக்கும் கொளுத்தியிருக்கவேண்டியது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் தானே லாம்புகள் பழுதுபார்க்கவும், நிறந்தீட்டவும், உடைந்த சிமினிக்கு பதில்சிமினி போடவும் உடைந்த கண்ணாடிகளுக்கு பதல்காய் போடவும் புதுத்திரி தேவையானநேரம் புதுத்திரிபோடவும் வேண்டியது. "டேலயிற்" மண்ணெண்ணெய் மாத்திரம் பாவிக்க வேண்டியது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் தனது கேள்வித்தொகையின் நாலிலொரு பங்குப்பணம் கட்டி ஒரு உடன்படிக்கை உறுதிய மெழுதிக்கொள்ள வேண்டியது. அவ்வுறுதிச்செலவு தானே பொறுத்துக்கொள்ள வேண்டியது.

அக்கிராசனர் குறைந்த அல்லது வேறெந்த கேள்வியையாகுதல் ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடுகள் செய்துக்கொள்ளவில்லை.

இன்னும் இதைப்பற்றிய விபரங்களை லோக்கல் போட்டு ஆபிசில் கேட்டறிந்துக்கொள்ளலாம்.

ஜெ. எஸ். டி சேரம்,
அக்கிராசனருக்காக.

லோக்கல்போட்டு ஆபிஸ்,
அநுராசபுரம், 1909 ம் கார்த்திகைமீ 26 ந் தேதி.

[Tender for scavenging and removal of Night Soil, Local Board, Anuradhapura.]

அனுராசபுரப் பட்டணத்துக் குப்பை கூளம் கூட்டுத லும் கக்கூசு துப்பரவுபண்ணுதலும்.

1. குப்பை கூளம் கூட்டுதலும் கக்கூசு துப்பரவு பண்ணுகிற கேள்விப்பத்திர மென்று, எண்வேலாப் பில் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத் திரங்கள் 1910 ம் ஆண்டுக்கு இதன்பின்னால் சொல்லப் பட்ட வேலைகளுக்காக 1909 ம் ஆண்டு மார்கழி மீ 15 ந் தேதி புதன்கிழமை மத்தியானம் 12 மணிவரை யும் லோக்கல்போட்டு அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளு வார்.

2. கூட்டுதல் நாள்தோறும் றவுன் றோட்டுகளை யும், வாய்க்கால்களையும், அசுத்தமுள்ளவையிலிருக்கும் முடிக்குரிய காணிகளையும் கூட்டுவித்துக் குப்பைகளை அக்கிராசனர் காலத்துக்குக்காலம் குறிக்குமிடங்க ளுக்குக் காத்தையில் லேற்றிக்கொண்டுபோகவேண்டி யது.

3. கக்கூசுகள் துப்பரவுபண்ணுதல்.—அக்கிராசனு ரால் குறிக்கப்பட்ட மணித்தியாலத்துக்கிடையில் காலத்துக்காலம் குறிக்கப்படும் இடங்களிலும், பிர சித்த கக்கூஸ்களிலும், சனங்களின் கக்கூசுகளிலு மிருந்து மலத்தையெடுத்துக்கொண்டுபோய் அடக் கம்பண்ணவேண்டியது. மேலும் கக்கூசுகளை நன் ருய்த் துப்பரவுபண்ணித் துன்நாற்றத்தை அகற்றும் மருந்துகளும் போடவேண்டியது.

பிரசித்த கக்கூசுகளாவன.

ஓட்டுப்பள்ளம் காலயிலிருக்கும் கக்கூசு, பள்ளி வாசல் றோட்டிலிருக்கும் கக்கூசு, மயில் ஒழுங்கையி லிருக்கும் கக்கூசு, டிக்சன் றோடிலிருக்கும் கக்கூசு தற்காலம் பிரசித்த கக்கூசாகப் பாவிக்கப்படுகின்ற வெள்ளரசு கோவிலுக்குப் பின்னுலிருக்கும் வந்தனு காரரின் கக்கூசு.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் வேலையைச் சரியாய் நிறைவேற்றுவதற்காக கேட்ட கேள்வித் தொகையின் நாலி லொரு பங்குப் பணக்கட்டி ஒரு உடன்படிக்கை உறுதியும் முடிக்கவேண்டியது. அவ் வுறுதிச்செலவை அந்தக் கேள்விக்காரன் தானே பொ றுத்துக்கொள்ளவேண்டியது.

4. அக்கிராசனர் குறைந்த அல்லது வேறெந்தக் கேள்வியையாவது ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடு செய்துகொள்ளவில்லை.

இதைப்பற்றிய இன்னும் விபரங்களை லோக்கல் போட்டு ஆபீசில் கேட்டறிந்துகொள்ளலாம்.

ஜே. எஸ். டி சேரம்,
அக்கிராசனருக்காக.

லோக்கல் போட்டு ஆபீசு, அனுராச
புரம், 1909 ம் ஸ்ரீ கார்த்திகை மீ 26 ந் தேதி.

---

[Election of Unofficial Members, Local Board, Gampola.]

1908 ம் ஆண்டு 13 ம் சட்டப்படி, கம்பளை நகரசுகாதா ரங்களையும் சீர்திருத்தங்களையும் கவனிக்கும்படி, கவர்ன் மெந்து உத்தியோகமில்லாத மூன்று ஆட்களைத் தெரிந்து எடுக்கும் கூட்டம், 1909 ம் ஆண்டு மார்கழிமாசம் 17 ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 8.15 மணிக்கு கம்பளை பொ லீஸ்கோட்டில் நடக்குமென்று இத்தால் அறிவிக்கப்படு கிறது.

ஜே. பீ. லூவிஸ்,
அக்கிராசனபதி.

லோக்கல்போட் ஆபீஸ், கம்பளை,
1909 ம் ஸ்ரீ கார்த்திகை மீ 24 ந் உ.

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[L. E. Cabral.]

சீனு கோறளே அதிகாரி பற்றுவில் தளவத்துனை பிற்றவில் வசிக்கிற லொக்கு வியணகே எமலியானு கபராலாகிய நான் திருக்கோணமலை டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலை பார்ப்பதற்கு, 1907 ம் ஆண்டு 1 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பங்கு 1 B செக்ஷன்படி, இத்திகதி துவக்கம் மூன்று மாசத்தின்பின் பதிவுக்கந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேனென்று இத் தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

எல். ஈ. கபரால்.

தளவத்துனைபிற்ற,
1909 ம் ஸ்ரீ கார்த்திகை மீ 10 ந் தேதி.

---

[C. J. Kanthappah.]

மட்டுக்களப்பு மண்முனைப்பற்று ஆரைபத்தையிலிருக் கும் சின்னத்தம்பி ஜோசேப் கந்தப்பா ஆகிய நான் மட் டுக்களப்பு டிஸ்திறிக்கில் தமிழ் பாஷையில் பிரசித்த நொத் தாரிசாக 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச்சட்டத்தின் 8 ம் பிரிவின் 1B செக்ஷன்படி என்னை ஏற்றுக்கொள்ளும்படி கனம் றெஜிஸ்திறார் ஜெனறல்துரையவர்களுக்கு இத்திகதி துவக்கம் மூன்று மாசங்களின்பின் விண்ணப்பம்பண்ணிக் கேட்டுக்கொள்வேனென்பதை இத்தாலறிவிக்கின்றேன்.

சி. ஜே. கந்தப்பா.

ஆரைபத்தை,
1909 ம் ஸ்ரீ நவம்பர் மீ 8 ந் உ.

---

[P. M. Rodrigo.]

அருத்துகூர் கோறளை ராகம்பற்றுவில் பமுனுகம உன்வெட்டக்கய்யாவில் வசிக்கிற வஸ்தியான் கோரா லலாகே மார்ஷல் ருதிரீகுவாகிய நான் இரட்ணபுரி டிஸ்திறிக்கில் சிங்களப பாஷையில் பிரசித்த நொத் தாரிசாக வேலைபார்ப்பதற்கு 1907 ம் ஆண்டு 1 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பங்கு 1 B செக் ஷன்படி இத்திகதி துவக்கம் மூன்று மாதத்தின்பின் பதிவுகந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட் பேன் என்று இத்தால் அறிவித்தல்கொடுக்கிறேன்.

பீ. எம். ருதிரீகு.

உன்வெட்டகெய்யாவ, பமுனுகம,
1909 ம் ஸ்ரீ கார்த்திகை மீ 29 ந் தேதி.

---

[H. A. Fonseka.]

களுத்துறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த வாத்துவையி லிருக்கும் ஹேவாபொன்சேக்கரகே ஹென்றி பொன் சேக்கா என்பவர் இன்று முதல் மூன்று மாசம் செல் றதின்பின் களுத்துறை டிஸ்திறிக்கில் சிங்களப் பா ஷையில் பிரசித்த நொத்தாரிசாக 1909 ம் ஸ்ரீ 1 ம் நம்பர் 8-வது பிரிவில் 1/B அட்சரதின்பேரால் றிஜிஸ்திறார் ஜெனறல் அவர்களிடம் கேள்க ஆரம்பித் திருக்கிற செய்தி இத்தாலறிவிக்கிறேன்.

எச். ஏ. பொன்சேக்கா.

1909 ஸ்ரீ நொவெம்பர் மீ 22 ந் தேதி.

---

[E. Simeon.]

கண்டி கொழும்பு வீதி 141 ம் நம்பர் வீட்டில் வசிக் கும் எட்வாட் சிமியோனாகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் இலக்கச் சட்டத்தின் B என்னும் செக்ஷன் 2 ம் விதிப்படி கண்டிப்பிரிவில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தா ரிசுவாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படவும் பதி வுசெய்யப்படவும் இன்றுமுதல் மூன்று மாதத்தின் பின் பதிவுகந்தோர் தலைவரிடம் உத்தரவு கேட்பேனென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

ஈ. சிமியோன்.

கொழும்பு வீதி 141 ம் நம்பர்,
கண்டி, 1909 ம் ஸ்ரீ நவம்பர் மீ 30 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.